www.Padasalai.Net www.TrbTnpsc.com

# T இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2025

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி பொருளியல் மதிப்பெண்கள்: 90

பகுதி - I

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்:- 20×1=20

1) கேட்கும் திறன் இழப்பு ______ மாசுவின் விளைவாகும்
அ) நீர் ஆ) ஒலி இ) நிலம் ஈ) காற்று

2) "புதிய பேரியல் பொருளியலின் தந்தை" என அழைக்கப்படுபவர் யார்?
அ) ரேக்னர் ஃபிரிஸ்க் ஆ) ஆடம்ஸ்மித் இ) காரல் மார்க்ஸ் ஈ) ஜே.எம்.கீன்ஸ்

3) ______ ஆல் நாட்டு வருமானத்தை வகுத்தால் தலைவீத வருமானம் கண்டறியலாம்
அ) உற்பத்தி ஆ) நாட்டின் மக்கள்தொகை இ) செலவு ஈ) GNP

4) தூய பொதுப் பொருட்களில் நுகர்ச்சி என்பது ______
அ) போட்டி உடையது ஆ) போட்டியற்றது இ) இரண்டும் ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

5) நீண்ட காலத்திட்டமிடலின் அடிப்படைக் கருத்து நாட்டின் ______ மாற்றமாகும்
அ) நிதி ஆ) வேளாண்மை இ) தொழில் ஈ) கட்டமைப்பு

6) இந்திய புள்ளியலின் தந்தை என்றழைக்கப்படுபவர் ______
அ) போடிங்டன் ஆ) கிராக்ஸ்டன் இ) மகலநோபிஸ் ஈ) ரொனால்டு பிஷர்

7) இரண்டாம் நிலை விவரங்களுக்கான ஆதாரம் ______
அ) வெளியிடப்பட்ட விவரங்கள் ஆ) வெளியிடப்படாத விவரங்கள்
இ) மேற்சொன்ன இரண்டில் ஒன்று ஈ) அ மற்றும் ஆ

8) X, Y ஆகிய மாறிகள் இரண்டும் ஒரே திசையில் மாறினால், உடன்தொடர்புக் கெழு எவ்வாறு இருக்கும்?
அ) நேர்மறையாக ஆ) எதிர்மறையாக இ) 0 ஈ) 1

9) பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் என்பதன் பொருளாவது
அ) அரசின் செலவை விட அரசின் வருவாய் அதிகம்
ஆ) அரசின் நடப்புக் கணக்குச் செலவு நடப்புக் கணக்கு வருவாயை விட அதிகம்
இ) அரசின் மொத்தச் செலவு மொத்த வருவாயை விட அதிகம்
ஈ) மேலே கூறியவற்றில் எதுவும் இல்லை

10) உலக வாணிக அமைப்பின் முதலாவது அமைச்சர்கள் அளவிலான மாநாடு நடைபெற்ற இடம்
அ) சிங்கப்பூர் ஆ) ஜெனிவா இ) சியாட்டில் ஈ) டோஹா

11) சுற்றுலாவும், வெளிநாட்டுப் பயணமும் தொடர்புடைய பரிமாற்றங்கள் அயல்நாட்டுச் செலுத்து சமநிலையின் எந்தக் கணக்கின் கீழ் பதிவாகின்றன
அ) பண்டங்கள் வாணிகக் கணக்கு ஆ) பணிகள் வாணிகக் கணக்கு
இ) பரிமாற்றக் கணக்கு ஈ) மூலதனக் கணக்கு

12) சுழற்சி அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை சமமற்ற நிலைக்கான காரணம்
அ) வாணிகச் சுழற்சியில் மாறுபட்ட காலகட்டம்
ஆ) வருமானமும் விலை தேவை நெகிழ்ச்சியும், நாடுகளுக்கிடையே வேறுபடுதல்
இ) நீண்ட காலப் பொருளாதார மாற்றங்கள் ஆ) அ மற்றும் ஆ

13) வணிக வங்கிகளின் பணிகளின் இருபெரும் பிரிவு
அ) முதன்மைப் பணிகள் ஆ) இரண்டாம் நிலை பணிகள்
இ) மற்ற பணிகள் ஈ) மேற்சொன்ன அனைத்தும்

14) $M_1$, $M_2$ ஆகிய இரண்டிற்கும் உள்ள வேறுபாடு
அ) அஞ்சலக அனைத்து வைப்புகள்
ஆ) அஞ்சலக சேமிப்பு வங்கியின் சேமிப்பு வைப்புகள்
இ) வங்கியின் கால வைப்புகள் ஆ) காகிதப்பணம்

15) MPC=0.5 எனில் பெருக்கியின் மதிப்பு
அ) 2 ஆ) 1/2 இ) 0.2 ஈ) 20

16) கீன்சின் நுகர்வுச் சார்பு C=10+0.8 ஆக இருந்து, செலவிடக்கூடிய வருவாய் ரூ.1000 ஆக இருந்தால் நுகர்வு எவ்வளவு?
அ) ரூ.0.8 ஆ) ரூ.800 இ) 0.81 ஈ) ரூ.810

17) கீன்சின் கருத்துப்படி முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் எப்படிபட்ட வேலையின்மை காணப்படுகிறது?
அ) முழு வேலைவாய்ப்பு ஆ) தன் விருப்பமற்ற வேலையின்மை
இ) தன் விருப்ப வேலையின்மை ஈ) குறைவு வேலைவாய்ப்பு

Scanned with CamScanner
Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

T (2) XII பொருளியல்

18) மொத்த மதிப்பில் இருந்து ________ ஐ கழித்தால் நிகர மதிப்பு கிடைக்கும்?
அ) வருமானம் ஆ) தேய்மானம்
இ) செலவு ஈ) வினை முடிவடைந்த பண்டங்களின் மதிப்பு

19) பேரியல் பொருளாதாரம் ஆய்வது
அ) தனிமனிதர்களை ஆ) நிறுவனங்களை இ) நாடுகளை ஈ) ஒட்டுமொத்தங்களை

20) உலகத்துவம் உருவாக்கப்பட்ட ஆண்டு
அ) 2001 ஆ) 2002 இ) 2003 ஈ) 2000

பகுதி - ஆ

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×2=14
அவற்றில் வினா எண்.30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்:-

21) முடுக்கி - வரையறு?
22) தொகு அளிப்பின் கூறுகள் யாவை?
23) நாட்டு வருமானக் கணக்கீட்டில் "சொந்த நுகர்வு" எவ்வாறு சிக்கலைத் தீர்க்கிறது?
24) பொருளாதாரம் என்பதன் பொருள் யாது?
25) பணவீக்கம் என்பதன் இலக்கணம் தருக?
26) CRR மற்றும் SLR ஆகியவற்றை வேறுபடுத்துக?
27) சிறப்பு எடுப்புரிமைகள் என்பதன் பொருளை எழுதுக?
28) நேர்முக வரி என்றால் என்ன? இரண்டு உதாரணம் தருக?
29) சூழலியல் என்றால் என்ன?
30) பொருளாதார அளவையியல் என்றால் என்ன?

பகுதி - இ

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×3=21
அவற்றில் வினா எண்.40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்:-

31) பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தைப் பட்டியலிடுக?
32) வாணிக ஒத்துழைப்புத் தொகுதிகள் என்றால் என்ன?
33) நபார்டின் பணிகள் யாவை?
34) உலோகப் பணம் பற்றி ஒரு குறிப்பு வரைக?
35) நுகர்வுச் சார்பை பாதிக்கிற ஏதேனும் அக மற்றும் புறக் காரணிகளை விளக்குக?
36) கீழ்காண்பவற்றைச் சுருக்கமாக எழுதுக? அ) பருவகால வேலையின்மை
ஆ) உடன்பாடில்லா வேலையின்மை இ) கற்றோர் வேலையின்மை
37) தலைவீத வருமானம் பற்றி ஒரு குறிப்பு எழுதுக?
38) பொருளாதார முறைகளின் வகைகளை குறிப்பிடுக?
39) குறிப்பு வரைக? அ) பருவநிலை மாற்றம் ஆ) அமில மழை
40) பின்வரும் விவரங்களுக்கு திட்டவிலக்கத்தினைக் காண்: 14, 15, 9, 22, 17, 20, 12, 11

பகுதி - ஈ

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 7×5=35

41) அ) திட்டமிடலுக்கு எதிரான வாதங்களை எடுத்துரைக்கவும். (அல்லது)
ஆ) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்கவும்.
42) அ) சேயின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க. (அல்லது)
ஆ) மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை?
43) அ) பொருளாதார ஆய்வில், சமூக கணக்கிடுதலின் அவசியத்தை விவாதி? (அல்லது)
ஆ) முதலாளித்துவம், சமத்துவம் ஆகியவற்றின் இயல்புகளை ஒப்பிடுக?
44) அ) வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க? (அல்லது)
ஆ) அயல்நாட்டுச் செலுத்து சமமின்மையின் வகைகளை விவரி?
45) அ) இந்திய சமூக பொருளாதார மேம்பாட்டில் டபிள்யூ.டி.ஓ-ன் பங்கினை விவாதிக்க.
(அல்லது)
ஆ) பொதுநிதியின் எல்லைகளை விளக்குக?
46) அ) நீடித்த அல்லது வளம்குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக? (அல்லது)
ஆ) பல்வேறு வகையான திட்டமிடல் வகைகளை விவரி?
47) அ) தேசிய வருவாயை கணக்கிடுவதால் ஏற்படும் சிக்கல்கள் யாவை? (அல்லது)
ஆ) பின்வரும் விவரங்களைக் கொண்டு காரல் பியர்சனின் உடன் தொடர்புக் கெழுவினைக் கண்டறிக.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேவை X: | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
| விற்பனை Y: | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |

*********

Scanned with CamS